TAMIL NADU LEGISLATURE LIBRARY
6 NOV 1972
MADRAS

தமிழ் நாடு சட்டப் பேரவை

புதன்கிழமை, 1972 ஆகஸ்ட் 23.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

State Police

* 266 *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Chief Minister be pleased to state whether there is any proposal to reconstitute the Police force in this State?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இம்மாநிலத்திலுள்ள காவல் படையை மாற்றியமைக்கும் செயற்குறிப்பு ஏதும் இல்லை. எனினும் அரசால் நியமிக்கப்பட்ட தமிழ் நாடு காவல் துறை ஆணைக்குழு, காவற் படையைச் சீரமைப்பதற்காகப் பல பரிவுரைகளைச் செய்துள்ளது. அவை அரசின் பரிசிலனையிலுள்ளன.

திரு. என். கே. பழனிசாமி : எஸ்.எஸ்.எல்.ஸி. படித்தவர்களை சமீபத்தில் ஹெட் கான்ஸ்டபிள் வேலைக்கு எடுத்து, அவர்களை ஹெட் கான்ஸ்டபிளாகவும், ஸ்டேஷன் ரைட்டர்களாகவும் மாற்றியும், சென்னை நகரத்தில் ஒவ்வொரு போலீஸ் ஸ்டேஷனும் சப்-இன்ஸ்பெக்டர் சார்ஜில் இருந்ததற்குப் பதிலாக சர்க்கிள் இன்ஸ்பெக்டரை மாற்றுவதும் இப்படி மாற்றங்கள் செய்வது லா அண்டு ஆர்டரை சரியான முறையில் மாற்றியமைப்பதற்கு சர்க்கார் ஏதாவது யோசனை செய்திருக்கிறதா? அப்படியானால் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: போலீஸ் கமிஷனுடைய பரிந்துரைகளுக்கு ஏற்ப காவல் துறையில் சில சீரமைப்புகளைச் செய்வதற்கு அரசு உத்தேசித்திருக்கிறது என்று சொன்னேன்.

சமீபத்தில் ஆயிரம் பேர் ஃபர்ஸ்ட் கிரேட் காவலர்களாகத் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இந்தப் போலீஸ் கமிஷன் பல இடங்களிலும் போலீஸ் ஸ்டேஷன்களை அவுட்-போஸ்ட் நிலையில் இருப்பதை 'அப்-கிரேட்' செய்ய வேண்டும் என்ற கருத்தைத் கூறியிருந்ததே அதைப் பற்றி ஏதாவது பரிசீலனை நடத்தி முடிவு எடுத்திருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பொதுவாக, போலீஸ் ஆணைக் குழுவின் பரிந்துரைகளையெல்லாம் அலுவலர்கள் அடங்கிய குழுவொன்று ஆராய்ந்தது. அந்தக் குழு ஆராய்ந்து எடுத்த முடிவுகளை, அமைச்சரவையின் ஒரு துணைக் குழுவொன்று அமைக்கப்பட்டு, அந்தத் துணைக் குழு இப்பொழுது ஆராய்ந்து வருகிறது. இறுதி முடிவு விரைவில் எடுக்கப்படும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : போலீஸ் இலாக்காவில் சப்-இன்ஸ்பெக்டர் லெவல் வரையிலும் அதிகாரிகளை நியமிப்பதற்கு பப்ளிக் சர்விஸ் கமிஷன் போன்ற ஒரு 'அட்டானமஸ் பாடி'யை நியமிப்பதற்கு இந்த அரசாங்கம் உத்தேசிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அப்படிப்பட்ட உத்தேசம் எதுவும் இல்லை.

திரு. நா. வீராசாமி : இப்பொழுது அதிகமாக ஐ.பி.எஸ். அதிகாரிகளை மத்திய அரசாங்கத்தினர் மாநிலங்களிலே அனுப்பிக் கொண்டிருக்கின்றனர். அதைக் குறைத்து, ஸ்டேட் சர்விஸை இன்க்ரீஸ் செய்து, நம்முடைய மாநிலத்திலே இருக்கிறவர்களை டி.எஸ்.பி. பதவிக்கு நேரடியாகத் தெரிந்தெடுக்க அதிகமான வாய்ப்புகளை உண்டாக்க அரசாங்கம் முயற்சிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதுபற்றி அரசு யோசிக்கும்.

திரு பெ. சௌந்தரபாண்டியன் : காவல் துறையை எந்தெந்த வகையில் சீரமைப்பதற்கு அரசு ஆலோசனை செய்து வருகிறது என்பதை முதலமைச்சரவர்கள் தெரிவிப்பார்களா ?

1972 ஆகஸ்ட் 23]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : சீரமைப்பதற்கான பரிவுரைகளைப் போலீஸ் கமிஷன் அறிவித்தது. அவற்றிலே முக்கியமான பரிவுரைகளைக் குறிப்பிடுகின்றேன். கணக்கிடும் பொறி போன்ற நவீன சாதனங்களைப் பயனுக்குக் கொணர்தல்; காவல் துறை வானொலித் தொடர்பு வசதிகளை விரிவுபடுத்துதல்; உருவ நேர்படி அனுப்புவதற்கான சாதனங்களைப் பொருத்துதல் ஆகியவற்றுடன் காவல் படையைத் தற்காலத்திற்கேற்ற வகையில் சீரமைத்தல்; 16 காவல் துறை மாவட்டங்களில் இயல் ஊர்தி சட்டஞ்சார்ந்த குற்ற அறிவியல் ஆய்வுக்கூடங்களை நிறுவுதல்; காவலர் வண்டிகளின் எண்ணிக்கையை 823 இலிருந்து 3,160 ஆக உயர்த்துதல்; மாவட்டப் போலீஸ் ஆய்வுக் கழகம், சிறப்புப் பிரிவு, மாவட்ட குற்றப் பிரிவுகள் முதலியவற்றைச் சீரமைத்தல்; படைக்கலம் தாங்கிய சேமக் காவல் படையினர் பிரிவுகளை 134½ இலிருந்து 150½ ஆக உயர்த்துதல்; காவல் துறை மாவட்டங்களை இரண்டாகப் பிரித்தல்; 71 உட்கோட்டங்களை 81 உட்கோட்டங்களாகவும், 182 சர்க்கிள்களை சுமார் 306 சர்க்கிள்களாகவும் அதிகப் படுத்துதல்; தேவைப்படும் இடங்களில் காவல் நிலையங்கள், புறக் காவல் நிலையங்கள் ஆகியவற்றின் எண்ணிக்கையை உயர்த்துவது. இவை போன்ற பல சிபாரிசுகள் செய்யப் பட்டிருக்கின்றன. அவை ஆய்விலே இருக்கின்றன.

திரு. கா. வேழவேந்தன் : முதலமைச்சரவர்கள் பதில் சொல்லும்போது ஆயிரம் தலைமைக் காவலர்கள் தெரிந்தெடுக்கப் பட்ட மகிழ்ச்சியான செய்தியை முன்பே சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் எந்த அடிப்படையில் மாநிலம் முழுவதும் சீராக நியமிக்கப்படப் போகிறார்கள் என்ற விவரத்தை அறிவிப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : 'ஃபர்ஸ்ட் க்ரேட்' காவலர்கள் என்ற அடிப்படையில் அவர்கள் நியமிக்கப்பட இருக்கிறார்கள். பயிற்சி முடிந்த பிறகு அது பற்றி விரிவான முடிவு எடுக்கப்படும்.

திரு. கே. எ. வகாப் : காவல் துறையினருக்கு உதவியாக இருக்கும் பொருட்டு டெலிவிஷன் வசதிகள் அவர்களுடைய வண்டிகளில் பொருத்த ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : காவல் துறைக்குப் பல்வேறு வசதிகள் தேவை என்று குழு அறிவித்திருக்கிறது. நிதி நிலைக்கு ஏற்றவாறு அவைகளையெல்லாம் அவ்வப்போது பரிசீலிக்கப்படும்.

* 267 Q.—THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. the Chief Minister be pleased to state whether it is a fact that the Union Government have set up a Committee on Police Training on 10th November 1971?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஆம்.

திரு. கே. டி. கே. தங்கமணி : அந்தக் குழுவானது ஒரு கேள்வித்தாளை சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அனுப்பியிருக்கிறார்கள். அம்மாதிரியாக நமது அரசுக்கும் அனுப்பியிருக்கிறார்களா ? அப்படி அனுப்பியிருந்தால் நாம் ஏற்கெனவே கமிஷனுடைய சிபாரிசுகளையோ அல்லது நம்முடைய ஆலோசனைகளையோ, மத்திய அரசுக்குக் கொடுத்திருக்கிறோமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அவர்கள் தமிழகத்திற்கே வந்து இங்குள்ள அதிகாரிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், பத்திரிகையாசிரியர்கள், மாணவர்கள், தொழிற்சங்கத் தலைவர்கள், வழக்கறிஞர்கள், மேலவை சட்ட மன்ற உறுப்பினர்கள் ஆகியோரையெல்லாம் சந்தித்து இது பற்றிப் பல்வேறு விவரங்களை அறிந்து சென்றிருக்கிறார்கள். மாநில அரசைப் பொறுத்த வரையிலும் அவர்கள் அரசிடம் தொடர்பு கொண்டு, பல்வேறு விஷயங்களைத் தெரிந்து கொண்டு சென்றிருக்கிறார்கள். கேள்வித்தாளுக்குரிய பதிலை மாநில அரசு விரைவில் அனுப்பி வைக்கும்.

வானொலி

*268 வினா—திரு என். கிட்டப்பா : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வானொலியில் தமிழ் செய்தி அறிக்கைகளின் நேரம் குறைக்கப்பட்டது குறித்தும், பிற்பகல் இரண்டு மணிக்கு ஒலிபரப்பப்